Registered as a News Paper

பக்கங்கள் 06

விலை ரூபா: 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2024 தை 05 (18-01-1993) திங்கட்கிழமை ஓசை 435

## மூன்று நாள் துக்கதினம் அனுஷ்டிக்கக் கோரிக்கை

இந்திய அரசின் மிலேச்சத்தனமான சதி நடவடிக்கையால் பலியாகிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின், மூத்த தளபதியும், மத்தியகுழு உறுப்பினருமாகிய கேணல் கிட்டு அவர்கள் மற்றும் லெப். கேணல் குட்டிசிறி உட்பட 10 புலி வீரர்களுக்கு மரியாதை செலுத்துவதுடன் இந்திய அரசிற்கு கண்டனத்தையும், தேசிய ரீதியிலான எதிர்ப்பையும் தெரிவிக்குமுகமாக 18-ம், 19-ம், 20-ம் திகதிகளில் நாடெங்கும் தமிழீழமெங்கும் விடுதலைப்புலிகளால் துக்கதினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நாட்களில் தமிழீழ மக்களின் வாழ்விடங்கள், தொழிலிடங்கள், கல்வி நிலையங்கள், பாடசாலைகள்,

(2 ஆம் பக்கம் பார்க்க)

# கிட்டுவை மரணப் பொறிக்குள் தள்ளியமை

# இந்தியா இழைத்த மாபெரும் துரோகம்

## விடுதலைப் புலிகள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"எமது மூத்த தளபதியும், எமது இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினரும், சர்வதேச தலைமைச் செயலகத்தின் பொறுப்பாளருமான கேணல் கிட்டுவையும், மற்றும் ஒன்பது போராளிகளையும் மரணப் பொறிக்குள் தள்ளி, அவர்களை அழித்தமைக்கு இந்திய அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். இந்திய அரசின் இந்த வஞ்சகச் செயல் தமிழீழ மக்களின் தேசிய சுதந்திர இயக்கத்திற்கு இழைக்கப்பட்ட இன்னுமொரு மாபெரும் வரலாற்றுத் துரோகமாகும். இது இந்தியாவின் இரத்தக் கறைபடிந்த ஆதிக்க அரசியலுக்கு மேலும் இழுக்கைத் தேடிக் கொடுத்துள்ளது. தமிழீழ மக்கள் மீதான இனப் படுகொலைக்கு இந்தியா கைகொடுத்து உதவுகின்றது என்பதை இச்செயல் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது"

இவ்வாறு விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்துள்ள அதிகார பூர்வமான அறிக்கையில் இந்தியாமீது கண்டனம் தெரிவித்துள்ளது. இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

"தமிழீழ சுதந்திரப்போராட்டத்தை நசுக்கிவிடும் நோக்கிலும், தென்னாசிய பிராந்தியத்தில் தனது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் இலக்கிலும் இந்திய அரசு நீண்டகாலமாகவே தமிழர் பிரச்சினையில் தலையிட்டு வருகிறது. நண்பனாக நடித்து துரோகங்களை இழைத்துவருகிறது. சிங்கள அரசுடன் கூட்டுச்சேர்ந்து தமிழரின் விடுதலை இயக்கமாகிய புலிகள் இயக்கத்தை ஒழித்துக் கட்ட முயன்று வருகின்றது. தமிழீழ மக்களின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் அரசியல் தீர்வுக்கும் முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது. நாம் ஒரு ஒடுக்கப்பட்ட மக்கள் இனம் என்பதையும் இன அழிப்புக்கு எதிராக நீதியின் அடிப்படையில் உரிமைப்போர் நடத்தி வருகிறோம் என்பதையும் அலட்சியம் செய்துவரும் இந்திய அரசு எமது மக்களின் சாவிலும் அழிவிலும் தனது பூகோள ஆதிக்க அரசியலை முன்னெடுக்க முயல்கிறது. சிறிய தேசிய இனமாக தனித்து நின்று போராடி, உலக சமுதாயத்தின் அனுதாபம் கேட்டு நாம் எழுப்பும் உரிமைக் குரலையும் இந்தியா நசுக்கிவிட முயல்கிறது. தமிழீழ கடற்பரப்பை முற்றுகையிட்டு, தமிழ் நாட்டுடன் எமது தொடர்புகளை துண்டித்து, எமது கடற்போக்குவரத்தைத் தடைசெய்து எம்மைப் பலவீனப்படுத்தி எமது எதிரியான சிங்கள அரசு எமது போராட்டத்தை முறியடித்து எமது மக்களை கொன்றழிப்பதற்கு இந்தியா துணைபோகிறது.

இந்தியாவின் சதி வலைக்குள் சிக்கியதால் எமது தளபதிகள் பலர் உயிரிழக்க நேர்ந்த மிகவும் கொடுமையான நிகழ்வுகளை எமது மக்கள் அறிவார்கள். இந்தியாவிடம் தர்மம்கேட்ட திலீபன், இந்திய மத்தியஸ்துவத்தை நம்பிய புலேந்திரன், குமரப்பா, இந்தியாவிலிருந்து சமாதானதூதுவனாக வந்த ஜொனி ஆகியோரின் சோகக் கதைகளை எமது மக்கள் அறிவார்கள். இந்தியாவின் இந்தக் கொலைப் பட்டியலில் இப்பொழுது தளபதி கிட்டுவும் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளின் சமரச யோசனைகள் அடங்கிய திட்டத்துடன் சமாதான தூதுவனாகவே களமிறங்கிட்டு தமிழீழம் நோக்கிய கடற்பயணத்தை மேற்கொண்டார். வேறெந்தப் போக்குவரத்துப் பாதைகளும் இல்லாததால், சகலரும் சுதந்திரமாக நடமாடும் சர்வதேச கடல் மார்க்கமாக அவர் தமது ...

# இந்தியா மீது மக்கள் ஆவேசம்

# நரசிம்மராவ் கொடும்பாவி எரிப்பு



## போராளியாக மரணிக்கவே

நேற்று விடுத்துள்ள அதிகார பூர்வமான அறிக்கையில் இந்தியாமீது கண்டனம் தெரிவித்துள்ளது. இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

"தமிழீழ சுதந்திரப்போராட்டத்தை நசுக்கிவிடும் நோக்கிலும், தென்னாசிய பிராந்தியத்தில் தனது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் இலக்கிலும் இந்திய அரசு நீண்ட காலமாகவே தமிழ நடித்து துரோகங்களை இழைத்துவருகிறது. சிங்கள அரசுடன் கூட்டுச்சேர்ந்து தமிழரின் விடுதலை இயக்கமாகிய புலிகள் இயக்கத்தை ஒழித்துக் கட்ட முயன்று வருகின்றது. தமிழீழ மக்களின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் அரசியல் தீர்வுக்கும் முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது. நாம் ஒரு ஒடுக்கப்பட்ட மக்கள் இனம் என்பதையும் இன அழிவுக்கு எதிகிறோம் என்பதையும் அலட்சியம் செய்துவரும் இந்திய அரசு எமது மக்களின் சாவிலும் அழிவிலும் தனது பூகோள ஆதிக்க அரசியலை முன்னெடுக்க முயல்கிறது. சிறிய தேசிய இனமாக தனித்து நின்று போராடி, உலக சமுதாயத்தின் அனுதாபம் கேட்டு நாம் எழுப்பும் உரிமைக் குரலையும் இந்தியா நசுக்கிவிட முயலகிறது. தமிழீழ கடற்பரப்பை முற்றுகையிடித்து, எமது கடற்போக்குவரத்தைத் தடைசெய்து எம்மைப் பலவீனப்படுத்தி எமது எதிரியான சிங்கள அரசு எமது போராட்டத்தை முறியடித்து எமது மக்களை கொன்றழிப்பதற்கு இந்தியா துணைபோகிறது.

இந்தியாவின் சதி வலைக்குள் சிக்கியதால் எமது தளபதிகள் பலர் உயிரிழக்க நேர்ந்த மிகவும் கொடுமையான நிகழ்வுகளை எமது மக்கள் மத்தியத்துவ தினத நம்பிய புலேந்திரன், குமரப்பா. இந்தியாவிலிருந்து சமாதான தூதுவனாக வந்த ஜொனி ஆகியோரின் சோகக் கதைகளை எமது மக்கள் அறிவார்கள். இந்தியாவின் இந்தக் கொலைப் பட்டியலில் இப்பொழுது தளபதி கிட்டுவும் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளின் சமரச யோசனைகள் அடங்கிய திட்டத்துடன் சமாதான தூதுவனாகவே களமிறங்கிட்டு தமிழீழம் நோக்கிய கடற்பயணத்தை மேற்கொண்டார். வேறெந்த போக்குவரத்துப் பாதைகளும் இல்லாததால், சகலரும் சுதந்திரமாக நடமாடும் சர்வதேச கடல்மார்க்கமாக அவர் தமது தாயகம் நோக்கியபயணத்தைத்தொடர்ந்தார் இந்திய கடற்படை கிட்டுவின் கப்பலை இடைமறித்தபோது கிட்டுவின் சமாதான முயற்சிபற்றி இந்திய அரசிடம் எடுத்துக் கூறப்பட்டது ஆனால் இந்திய அரசு ஐரோப்பிய சமாதான முயற்சியைவிரும்பவில்லை. மேற்குலக மத்தியத்துவம் மூலம் தமிழர் பிரச்சினைக்கு சமா

( 2 ஆம் பக்கம் பார்க்க )



# இந்தியா மீது மக்கள் ஆவேசம்
# நரசிம்மராவ் கொடும்பாவி எரிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான திரு கிட்டு உட்பட பத்து விடுதலைப் புலிப் போராளிகளின் மரணத்துக்கு இந்தியாவே காரணம் எனக் குற்றம்சாட்டி இந்தியப் பிரதமர் திரு நரசிம்மராவ் மற்றும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா ஆகியோரது கொடும்பாவிகள் நேற்று யாழ். நகரில் எரிக்கப்பட்டன.

யாழ் நகரத்தின் பல வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட இக் கொடும்பாவி ஊர்வலத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையத்தில் இருந்து ஒரு கொடும்பாவி ஊர்வலம் ஆரம்பமாகியது. இக் கொடும்பாவி ஊர்வலம் மகேந்திரா வீதி, நாவலர் வீதி, இராசாவின் தோட்டம், அர்ச்சுனா வீதி, ஆஸ்பத்திரி வீதி, ஆகியவற்றினூடாகச் சென்று யாழ் பஸ்நிலையத்தை அடைந்தது.

அங்கு கொடும்பாவிகள் வைக்கப்பட்டன. அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் சு. பரமராசா என்பவர் உரை நிகழ்த்தினார் "இன்று எமது மண்ணில் ஒலித்துக் கொண்டிருக்கும் மரண ஓலங்களுக்கு காரணமாகவும், எமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகவும் செயற்படுகின்ற இந்தியப் பிரதமரதும், தமிழக முதல்வரதும் கொடும்பாவிகளை நாம் எரிக்கின்றோம். இதன் மூலம் எமது ஒருமித்த குரலை சர்வதேசத்திற்கு உணர்த்த முடியும்" இவ்வாறு சு. பரமராசா தனது உரையில் குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து மக்கள் கோசம் எழுப்ப கொடும்பாவிகள் தீமூட்டி எரிக்கப்பட்டன.

## தீவர்த்திகளுடன் ஊர்வலம்

இதேவேளை நேற்றுமாலை 6.15 மணியளவில் கொக்குவில் பஞ்சவனடபதி ஆலயத்திற்கு அருகாமையில் ஆரம்பித்த வேறோர் கொடும்பாவி எரிப்பு ஊர்வலம் தீவர்த்திகளின் ஒளியில் பறைசாற்றல், ஒப்பாரி, கோசங்களுடன் காங்கேசன்துறை வீதி வழியாக தட்டாதெருச் சந்தியை அடைந்து அரசடி வீதி, மகேந்திராவீதி, நாவலர்வீதி, கோவில் வீதி, ஊடாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தை அடைந்தது. சுமார் 30 நிமிடங்கள் வரை மக்கள் கோசங்களை எழுப்பியவாறு அலுவலகத்தைச் சூழ்ந்து கொண்டனர். அதிகாரிகள் வரும்வரை அவர்கள் அவ்விடத்திலேயே காத்துநின்றனர். இரவு 8.10 மணியளவில் அவ்விடத்திற்கு வந்த சர்வதேசசெஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் மக்கள் போராளிகளின் இழப்புகள்

( 2 ஆம் பக்கம் பார்க்க )



லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி

# சமாதானத் தூதுவனை சமுத்திரத்தில் மூழ்கடித்தாய்
## இந்தியாவுக்கு எதிராக மக்கள் கோஷம்

(யாழ்ப்பாணம்)

"இரத்தவெறி பிடித்த இந்திய அரசே சமாதானத்தூதுவனைச் சமுத்திரத்தில் மூழ்கடித்தாய். எமது விடுதலை வேட்கை விரைவில் உனக்குப் பதில் சொல்லும்" இதுநேற்று யாழ் நகரில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் மற்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோரது கொடும்பாவிகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டபோது பொதுமக்கள் பலர் எழுப்பிய கோஷங்களில் ஒன்று இவ்வூர்வலத்தின் போது எழுப்பப்பட்ட கோஷங்களில் சில வருமாறு:

"இந்தியா எங்கள் எதிரி"

"அன்று கடலில் குமரப்பா புலேந்திரன் உட்படப் பன்னிரண்டு வேங்கைகளைக்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## துக்கதினம் அனுஷ்டிக்க அமைப்புகள் கோரிக்கை

இந்திய அரசின் சதிவலைக்குள் சிக்கித் தம்மைத் தாமே அழித்துவீரகாவிய படைத்த கேணல் கிட்டு உட்பட பத்து விடுதலைப் புலிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக இன்று பூரண துக்கதினமாக பொது அமைப்புகள் பிரகடனப்படுத்தியுள்ளன

துக்கதினமான இன்று அத்தியாவசிய சேவைகளை பாதிக்

[ 5 ஆம் பக்கம் பார்க்க ]

## இலவச இணைப்பு

இந்தியச் சதியில் சிக்கி வங்கக் கடலில் காவியமான பத்து வேங்கைகளினதும் உருவப்படங்களை கொண்ட இலவச இணைப்பை இன்றைய ஈழநாதம் பத்திரிகையுடன் தவறாது பெற்றுக் கொள்ளவும்.

## போராளியாக மரணிக்கவே விரும்புகின்றேன்

"எமது இயக்கத்தில் கட்டுப்பாடு உள்ளது. எமது மக்களின் விடுதலைக்காக நான் ஒரு போராளியாக இருந்து போராளியாக மரணிக்கவே விரும்புகின்றேன்" (தளபதி-கிட்டு)

## இந்தியாவின் சதிக்கு பலியான வேங்கைகள்

கேணல் கிட்டு
[சதாசிவம் கிருஷ்ணகுமார் வல்வெட்டித்துறை]

லெப். கேணல் குட்டிசிறி
[இராஜையா சிறிகணேசன் சுதுமலை வடக்கு, மானிப்பாய்]

மேஜர் வேலன் (மலரவன்)
[சுந்தரலிங்கம் சுந்தரவேல் வியாபாரிமூலை, பருத்தித்துறை]

கடற்புலி கப்டன் ஜீவா
[நடராசா மார்க்ஜெயராஜ் கொய்யாத்தோட்ட ஒழுங்கை, பாசையூர், யாழ்.]

கடற்புலி கப்டன் குணசீலன் (குணராஜ்)
[சேகரன்குருஸ் மைக்கல் ஜீவா 2-ம் குறுக்குத்தெரு உதயபுரம், மணியந்தோட்டம்]

கடற்புலி கப்டன் றொசான்
[இரத்தினசிங்கம் அருணராசா அரசடி வீதி நல்லூர், யாழ்ப்பாணம்]

கடற்புலி கப்டன் நாயகன்
[சிவலிங்கம் சேகவன் பொலிகண்டி, வல்வெட்டித்துறை]

கடற்புலி லெப். தூயவன்
[மகாலிங்கம் ஜெயலிங்கம் கண்டிவீதி, யாழ்ப்பாணம்]

கடற்புலி லெப் நல்லவன்
[சிவஞானசுந்தரம் ரமேஸ் மணியந்தோட்டம், கொழும்புத்துறை, யாழ்]

கடற்புலி லெப். அமுதன்
[அலோசியஸ் ஜான்சன் 2 ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை வடக்கு, யாழ்.]

## மரண அறிவித்தல்

### திரு. பேரம்பலம் வாரித்தம்பி
### (P. V. தம்பி)

(ஓய்வு பெற்ற அதிபர். சென். மேரிஸ் தமிழ்க் கலவன் பாடசாலை. பண்டாரவளை )

மீசாலை வடக்கைச் சேர்ந்த திரு. பேரம்பலம் வாரித்தம்பி (ஓய்வுபெற்ற அதிபர். சென் மேரிஸ் தமிழ்க்கலவன் பாடசாலை, பண்டாரவளை.) 17 - 01 - 1993 இல் காலமானார். அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பேரம்பலம் செல்லையா J P. ஒய்வு பெற்ற தபால் அதிபர்) காலஞ்சென்ற தங்கமுத்து செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவப்பிரகாசம் இராசரத்தினம், செல்லமுத்து ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18-01-1993இன்றுபிற்பகல் 2மணியளவில்மீசாலைவடக்கு வீரக்கொடியர் வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

வீரக்கொடியர் வீதி, ஞானம் வாரித்தம்பி
புத்தூர்ச் சந்தி.
மீசாலை வடக்கு,
மீசாலை. (4024)

மூன்று நாள் செயலகங்களில்கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டு துக்கத்தை அனுஷ்டிப்பதோடு கடமையில் ஈடுபடுபவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து துக்கத்தையும் கண்டனத்தையும் வெளிக்காட்டுவர். சகல செயலகங்களிலும், நிறுவனங்களிலும் தமிழீழ தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும். அத்தோடு முக்கிய இடங்களில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டு சோககீதமும் தளபதி கிட்டு அவர்களுடைய உரையும் ஒலி பரப்பப்படும்.

இறுதி நாளான20 ஆம் திகதி புதன்கிழமை அன்று முழுமையானகதவடைப்பு மேற்கொள்ளப்படும். இந்நாளன்று இம்மாவீரர்களின் நினைவுருவப் படங்கள் தாங்கிய ஊர்வலப் பவனியும், இராணுவ அணி வகுப்பு மரியாதை நிகழ்வும், நினைவுக்கல் நடுகையும் அதனைத் தொடர்ந்து கண்டனப் பொதுக்கூட்டமும் நடைபெறும். இவ்வேற்பாட்டு நிகழ்வில் சகல தமிழீழ மக்களையும் உணர்வுபூர்வமான பங்களிப்புவழங்குமாறுவிடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இவ்வேற்பாட்டின் இடம், நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கிட்டுவை தானத் தீர்வு ஏற்படுவதை விரும்பவில்லை அத்துடன் தனது கடலாதிக்கப் பொறிக்குள் சிக்கிவிட்ட புலிகளின் முக்கிய தளபதியை ஒழித்துவிடவே இந்தியா விரும்பியது இதனால் எமது தளபதி கிட்டு இந்தியாவின் நயவஞ்சகச் சூழ்ச்சிக்குப் பலியாக நேர்ந்தது

தளபதி கிட்டுவும் ஏனைய புலிவீரர்களும் இந்தியாவின் படைபலத்துக்கும் பயமுறுத்தலுக்கும் தலைகுனியவில்லை. எமது இயக்கத்தின் வீர மரபுக்கு ஒப்ப தம்மைத் தாமே அழித்து தமிழினத்தின் தன்மானத்தை நிலைநிறுத்தினர்.

இந்த தியாக வரலாற்று நிகழ்வு இந்திய அரசின் அரக்கத்தனத்தை உலகுக்கு அம்பலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இந்தியா குறித்தும் இந்திய அரசின் வஞ்சக நடவடிக்கைகுறித்தும் சர்வதேச சமூகத்திற்கு அறிவிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

தொடர்ந்து இவ் அலுவலகத்தின் முன்னால் கொடும்பாவி ஒன்று வைக்கப்பட்டு தீமூட்டிக் கொளுத்தப்பட்டது இக் கொடும்பாவி எரிப்புச்சம்பவம் குறித்து தமது தலைமை அலுவலகத்துக்கு தெரியப்படுத்துவதாக செஞ்சிலுவை அதிகாரிகள் உறுதியளித்தனர்.

அதேவேளை யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இன்று கொடும்பாவி ஊர்வலங்கள் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அவ்வப்பகுதிகளில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## நூலகர் தேவை

ஆங்கில நூல்கள் பகுப்பாக்கம், பட்டியலாக்கம் செய்யக் கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்

**விண்ணப்ப முடிவுத் திகதி: 25- 01- 1993**

விளம்பர இலக்கம் 182
மே/பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(4018)

# வீரவணக்கம்



இந்தியச் சதியை உலகுக்குணர்த்திட
இந்துப்பெருங்கடல்சிவக்கச்செய்தனர்
- இவர்கள்
தமிழீழ தாயகம் மலரவே
தம்முயிர் தந்து நின்றனர்

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப் பிறப்பு 16 – 01 – 1972



வீரச்சாவு 18 – 01 – 1989

வீரவேங்கை **மாதவன்**

(கனகசிங்கம் இராகுலசிங்கம்)

நல்லதண்ணித் தொடுவாயில் இந்தியப் படையினருடான நேரடி மோதலில் வீரச்சாவெய்தினார்

தமிழ்த் தாயின் அன்பினிலே
தணியாத தாகங் கொண்டு
புலியாக மாறி நீ போர்க்களம் ஆடி
புகுந்த இந்திய இராணுவம் ஓடவைத்தாய்

இன்று எமதில்லத்தில் நடைபெறும் மதிய விருந்தில் போராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மிருசுவில் வடக்கு, குடும்பத்தினர்
சாவகச்சேரி. (4022)

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
யாழ். பிராந்திய உப பணிமனை

**தமிழீழ விடுதலைப் புலிகளின்**

மூத்த தளபதி



இந்துப்பெருங்கடல்சிவக்கச்செய்தனர் - இவர்கள்
தமிழீழ தாயகம் மலரவே
தம்முயிர் தந்து நின்றனர்

# தளபதி கேணல்

# கிட்டு (சதாசிவம் கிருஷ்ணகுமார்)

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய ஒன்பது வேங்கைகளுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## மணியர்ஸ் கட்டிடம்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/5803)

---

துணியாத தாகங் கொண்டு
புலியாக மாறி நீ போர்க்களம் ஆடி
புகுந்த இந்திய இராணுவம் ஓடவைத்தாய்

இன்று எமதில்லத்தில் நடைபெறும் மதிய விருந்தில் போராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மிருசுவில் வடக்கு, சாவகச்சேரி. — குடும்பத்தினர்

(4022)

---

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
யாழ். பிராந்திய உப பணிமனை

## தமிழீழ விடுதலைப் புலிகளின்
மூத்த தளபதி
## கேணல் கிட்டுவிற்கும்
மற்றும் ஒன்பது மாவீரர்களுக்கும்
## வீர வணக்கத்தை
செலுத்திக் கொள்கிறது!

- ★ தமிழீழ மக்களே இந்திய அரசின் சதியை இனம் காணுங்கள்!
- ★ இவர்களது தற்கொடை எமது தாயக மண்மீட்புக்கு உந்துதலைத் தருவதாகும்.

குறிப்பு:- இன்று (18 - 1 - 93) நடைபெறும் தேசிய துக்க தினத்தில் அனைத்து அங்கத்துவ நிறுவனங்களையும் மூடி துக்கத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

தலைவர்: அ. அல்பேட்

செயலாளர்: சி. இராசேந்திரன்

(சி/5805)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
### 17.01.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8053

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

26-4885, 41-5015, 28-6488.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-3654, 26-1949, 42-2364, 26-5113, 71-4984, 26-8052, 24-2545, 41-5602, 41-1799, 42-9326, 41-9663, 24-4908, 26-0649, 24-9676, 24-5041, 27-5823, 22-3379, 26-3294, 27-6583, 26-2510, 24-5955.

# வீர வணக்கம்



## தளபதி கேணல் கிட்டு
## (சதாசிவம் கிருஷ்ணகுமார்)

வல்வை மண்ணில் உதித்து
வங்கக் கடலில் காவியமான - எங்கள்
தளபதி கிட்டு......
இந்தியாவின் ஆதிக்க வெறியினால்
எமைப்பிரிந்தான்.
இவன் உடல் எங்களுடன் இல்லாது போனாலும்
இவனுடைய இலட்சியம் நிச்சயம் ஈடேறும்

## வெற்றிலைச் சிப்பத்திற்கும் இராணுவம் தடை

வெற்றிலையை சிப்பங்களாக வடபகுதி நோக்கி எடுத்துவருவதை வவுனியாவில் இராணுவத்தினர் தடைசெய்துள்ளனர்.

கடந்த 12-ம்திகதி வவுனியா நகரிலிருந்து பேயாடி கூழாங்குளம் இராணுவ சோதனை முகாம் ஊடாக எடுத்து வரப்பட்ட வெற்றிலைச்சிப்பம் ஒன்றிற்குள் கிறிஸ்மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இராணுவத்தினர் இவ் உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக தெரிய வருகிறது. [தி]


கண்ணீர் அஞ்சலி

இந்தியாவின் நயவஞ்சகத்தனத்தால்
பலியான விடுதலைப் புலிகளின்
மூத்த தளபதி

கேணல் கிட்டு

அவர்களுக்கும் அவருடன் பலியான
ஏனைய ஒன்பது வேங்கைகளுக்கும்

எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

நியூமாஸ்டர் இன்ஸ்ரிரியூட்
யாழ்ப்பாணம்.

(சி-5801)



இதய அஞ்சலி

இந்தியாவின் சதியினால் பலியான
விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி

கேணல் கிட்டு

அவர்களுக்கும் அவருடன் பலியான
ஏனைய ஒன்பது வேங்கைகளுக்கும்

எமது இதய அஞ்சலியைச் செலுத்துகிறோம்

பாரதிதாசன் கல்வி நிறுவனம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி/5802]


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## (சதாசிவம் கிருஷ்ணகுமார்)

வல்வை மண்ணில் உதித்து
வங்கக் கடலில் காவியமான - எங்கள்
தளபதி கிட்டு......
இந்தியாவின் ஆதிக்க வெறியினால்
எமைப்பிரிந்தான்.
இவன் உடல் எங்களுடன் இல்லாது போனாலும்
இவனுடைய இலட்சியம் நிச்சயம் ஈடேறும்

தளபதி கேணல் கிட்டுவுடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

லெப். கேணல் குட்டிசிறி
மேஜர் வேலன் [மலரவன்]
கடற்புலி கப்டன் குணசீலன்
கடற்புலி கப்டன் றொசான்
கடற்புலி லெப். நல்லவன்
கடற்புலி லெப். தூயவன்
கடற்புலி லெப். அமுதன்
கடற்புலி கப்டன் நாயகன்
கடற்புலி கப்டன் ஜீவா

ஆகியோருக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**எமது சங்கம் 1986 ஆம் ஆண்டு தளபதி கேணல்கிட்டு அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.**

வடமாகாண ஒப்பந்தக்காரர் சங்கம்,
தாவடிச்சந்தி, தாவடி.

(சி-5804)

பாரதிதாசன் கலை நிறுவனம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி/5802]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தவச்செல்வம் பிரேமாவதி

தோற்றம் 05-11-1957 | மறைவு 30-01-1992

சிந்துமொரு புன்னகையாலெம்
இல்லமதிலே ஒளிபரவும்
எந்தையர்தம் மனங்குளிருமுடன்
கவலையாவும் பொடியாகும்
சிந்தைதனில் நிறைந்த நின்செய்கனொடு
கண்ணிறைந்தான் தனைக்காண ஏகி
முந்தி நீ முடிவிலான் தாளடைந்த சேதி
முப்புரத்துத் தீயாய் மூண்ட தென் செய்வோம்

நின் பிரிவால் துயருறும் தந்தை:- சி. செல்வம்
தாய்:- செல்லம்மா
உடன்பிறந்தோர்:- செ. தங்கராசா, செ. பவளராணி, செ. இரஞ்சிதமலர் (டென்மார்க்) செ. வைவேந்திர மாலா. செ. திசராசயோகம் [சவுதி] செ. சௌந்தரராசா
பிள்ளைகள்:- கிருஷ்ணகுமார் (ஜேர்மன்) வனிதா (ஜேர்மன்) சயந்தகுமார்[ஜேர்மன்] [இராஜிகுமார்(ஜேர்மன்)

மந்துவில்
கொடிகாமம்.

[4016]

## கிட்டு மாமா!

எனக்கூறி குதூகலிக்கும் குழந்தைகளும்

## இட்டண்ணா!!

என அழைத்து மகிழ்ந்திருந்த நம்மவரும் - நிலை கெட்டுச் சோர எங்கு நீர் சென்றீரோ? என்றே ஏங்குகின்றோம்

கடலில் வீரச்சாவைத்தழுவிக்கொண்ட **தளபதி கிட்டு** அவர்களுக்கும், ஏனைய வேங்கைகளுக்கும் எமது வீர அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

- நல்லூர் பிரதேச வர்த்தக சபை

★ இன்று வர்த்தக நிலையங்களைமூடி அஞ்சலியைச் செலுத்துமாறும் கேட்கின்றோம்

(4019)

# வீர வணக்கம்



நாசகார இந்தியாவின் சதியில்

**வீரச்சாவை தழுவிய**

## கேணல் - கிட்டு மாமா

அவர்கட்கும் உடன் 9 போராளிகளுக்கும் எமது

**வீர வணக்கம்**

[சி-5800]

ராசி - மாலிகா யாழ்.

## வரி விளம்பரம்

### கடிகாரமா ? றேடியோவா ?

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு. DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வான வில் கல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேர்க்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (சி-5795)

### வியாழ வக்கிரம்

புத்தாண்டுப் பலன்களும், வியாழன் செவ்வாய் வக்கிரமும் எங்கும் விற்பனையாகின்றது. பாடசாலைப் புத்தகங்கள், சஞ்சிகைகள், கலண்டர்கள், ஆனந்த்ஸ் புத்தக நிலையம் 21/B மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். கிருஷ்ணசாமி புத்தகசாலை யாழ்ப்பாணம். (4003)

### சோதிடம்

உங்கள் எதிர்காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில், ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம் பார்க்க, அதிர்ஷ்ட எண்களில் பெயர் வைக்க வேலணை சோதிடர் V. A. சிவராசா 152B அரசடி றோட், கந்தர் மடம், யாழ்ப்பாணம். (4020)

### அராலியூரரின் நாடகங்கள்

அராலியூரின் வானொலி நாடகங்களை பலரும் மேடையில் நடித்துவிட்டனர். மாணவர்களும் நடிப்பதற்கேற்றவை நடித்தால் சிரித்து மகிழலாம். 1. கெட்டிக்காரர்கள் 2 முதலாம்பிள்ளை 30/-, இலக்கியப் பரிசுபெற்ற 19 நாடகங்கள். (3243)

### மகா கும்பாபிஷேகம்

கைதடி கிழக்கு வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29-ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

## ஓய்வூதியம் கிடைக்கவில்லை

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி அலுவலகங்களில் கடமையாற்றி இளைப்பாறி ஓய்வூதியம் பெற்று வருபவர்களுக்கு கடந்த ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் மூன்று மாதங்களுக்கும் உரிய ஓய்வூதியப் பணம் பெறுவதற்குரிய வவுச்சர்கள் இன்றுவரை தமக்குக் கிடைக்கவில்லை என ஓய்வூதியம் பெறுபவர்கள் ஆழ்ந்த கவலையும், மனவேதனையும் அடைந்துள்ளனர்.

பலதடவைகள் இதனைப் பெற உயரதிகாரிகளுடன் முயற்சிகள் செய்தும் கைகூடவில்லை என அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## நினைவு கூருகின்றோம்

**1993-01-18**

1986ஆம் ஆண்டு திருக்கோணமலை - நிலாவெளி வண்டிவிறக்கம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின் போது விழுப்புண் அடைந்திருந்து யாழ்ப்பாணத்தில் சிகிச்சை பெற்று வருகையில் இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

பாருக்- சாள்ஸ் (சிங்கராசா மரியதாஸ் - லிங்கநகர் திருக்கோணமலை)

1987ஆம் ஆண்டு மட்டக்களப்பு - வாகரை, கதிரவெளிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

லெப். இந்திரன் (இராசதுரை கோணேஸ்வரன்- 7-ம் வட்டாரம், கட்டைபறிச்சான், மூதூர் - திருக்கோணமலை)

2-ம் லெப் றஜனி (சங்கரமூர்த்தி உதயகுமார்- சம்பூர் மூதூர் - திருக்கோணமலை)

1989ஆம் ஆண்டு திருக்கோணமலை - தம்பலகமம், பட்டிமேட்டுப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மின்சார விபத்தில் எமைப்பிரிந்த-

2-ம் லெப். ரகு (ஆறுமுகம் அமிர்தலிங்கம் - தம்பலகமம் - திருக்கோணமலை)

நல்ல தண்ணீர்த்தொடுவாயில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

மாதவன் (கனகசிங்கம் இராகுலசிங்கம் - மிருசுவில் வடக்கு, கொடிகாமம்- யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெடுந்தீவுப் பகுதியில் படகு மூலம் வந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞர்.

1991ஆம் ஆண்டு வவுனியா - குறுமன்காட்டுப் பகுதியிற் சிறிலங்கா இராணுவக் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

லெப். லவன் (தர்மலிங்கம் யோகராசா விளாத்திக்குளம், ஓமந்தை வவுனியா)

லெப். நிக்சன் (கணேஷ் ஜெபதாசன் - கண்டிவீதி, விளாத்திக்குளம் ஓமந்தை வவுனியா)

1992ஆம் ஆண்டு வவுனியா - மன்னார் வீதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5793]

# கண்ணீர் அஞ்சலி

அவர்கட்கும் உடன் 9 போராளிகளுக்கும் எமது

**வீர வணக்கம்**

[சி-5800]

ராசி - மாலிகா யாழ்.

பரிசுபெற்ற 19 நாடுகளுக்கு.
(3243)

**மகா**
**கும்பாபிஷேகம்**

கைதடி கிழக்கு வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29-ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற வுள்ளது.

லங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5793]

# கண்ணீர் அஞ்சலி



கடந்த புதன் இரவு (13-01-93) சர்வதேச கடற்பரப்பில்
இந்திய கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு
சென்னை கடற்பரப்பிற்கு கொண்டுசெல்லப்பட்டு
வீரச்சாவெய்திய

விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினரும்
முன்னாள் யாழ். மாவட்டத் தளபதியுமாகிய

## கேணல் கிட்டு [ சதாசிவம் கிருஷ்ணகுமார் ]

அவர்கட்கும்

ஏனைய 9 வேங்கைகளான

| | |
|---|---|
| லெப். கேணல் குட்டிசிறி | மேஜர் வேலன்/மலரவன் |
| கடற்புலி கப்டன் ஜீவா | கடற்புலி கப்டன் குணசீலன்/குணராஜ் |
| கடற்புலி கப்டன் றொசான் | |
| கடற்புலி கப்டன் நாயகன் | கடற்புலி லெப். தூயவன் |
| கடற்புலி லெப். நல்லவன் | கடற்புலி லெப். அமுதன் |

ஆகியோருக்கும்

ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம்

4021

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம், யாழ். கிளை

(4021)

## சிந்தனைக்கு

சர்வாதிகாரம் உண்மையாகிவிட்ட நிலையில் புரட்சியும் உண்மையாகிவிடுகிறது.
— விக்டர் ஹ்யூகோ.

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாண· 18-01-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
த பெ. எண் - 05

# இந்தியாவின் சுயரூபம் மற்றொருமுறை அம்பலம்

மீண்டும் ஒருமுறை இந்தியா இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தனது காட்டுமிராண்டித் தனத்தை காட்டியுள்ளது. விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான திரு. கிட்டுவும், (சதாசிவம் கிருஷ்ணகுமார்) மேலும் ஒன்பது போராளிகளும் தற்கொலை செய்துகொள்ள நிர்ப்பந்தித்ததன் மூலம் இதனைச் சாதித்துள்ளது.

திரு. கிட்டுவும், ஒன்பது போராளிகளும், தாம் பயணம் செய்த கப்பலைத் தகர்த்து தம்மையும் அழித்துக் கொண்டதாக இந்தியா ஒரு போதும் காரணம் கூறிவிடமுடியாது. சர்வதேச கடற்பரப்பில் பயணம் செய்துகொண்டிருந்த கப்பலை ஆயுத முனையில் மடக்கியமையும், வலுக்கட்டாயமாக இந்தியக் கடற்பரப்பிற்குள் கொண்டு வந்தமையும், பின்னர், கப்பலில் இருந்தவர்களை கைது செய்ய முற்பட்டமையுமே, திரு. கிட்டுவும், ஏனைய போராளிகளும் மரணமடையக் காரணமாகும்.

இந் நிலையில், திரு. கிட்டுவும் ஏனைய போராளிகளும் வீரச்சாவு எய்தியமைக்கு இந்தியாவே முழுப் பொறுப்பும் ஆகும். இதில் எவையும் தற்செயலாக நடந்தது என்றோ அன்றி, தெரியாமல் நடந்ததொன்றோ எதுவுமில்லை. இந்தியா திட்டமிட்டு, தளபதி கிட்டுவையும், ஏனைய போராளிகளையும் சாகடித்துள்ளது.

அதேவேளை, இவ்விவகாரத்தில் இந்தியாவின் கூற்றுக்கள் யாவும் உண்மைத் தன்மை அற்றவை; முரண்பாடானவை; நயவஞ்சகத்தனமானவை. விடுதலைப் புலிகளின் கப்பலை இந்தியா 13ஆம் திகதி புதன்கிழமை இரவு 10.00 மணியளவில் கைப்பற்றியது. இதுகுறித்து இந்திய செய்தியாளர்களே உலக செய்தி ஸ்தாபனங்களுக்கு செய்திகளை வழங்கியுள்ளனர். இந்திய பாதுகாப்பு அமைச்சு இவ் விவகாரம் தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தனர். ஆனால், இந்திய பாதுகாப்பு வட்டாரங்களோ, படகு சனிக்கிழமை காலை பிடிபட்டது எனத் தெரிவித்துள்ளமை முழுப்பூசணிக்காயை சோற்றில் புதைக்கும் முயற்சியாகும். இது போன்றதே சர்வதேச கடற்பரப்பில், கைப்பற்றிய கப்பலை இந்தியக் கடற்பரப்பில்

# இந்திய வல்லாதிக்கத்தின் சூழ்ச்சி
# தளபதி கிட்டு மரணமடைய நேர்ந்தது

"எமது மூத்த தளபதி கேணல் கிட்டு, லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி உட்பட பத்து வீரர்களின் வீரச்சாவு தமிழீழ மக்களைப் பொறுத்தவரை பேரதிர்ச்சியையும் பெருந் துயரையும் ஏற்படுத்தியுள்ள அதே வேளையில் அந்தத்துயர நிகழ்வுக்குக் காரணமான இந்திய வல்லாதிக்கத்தின் மீது கடும் சினத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

"தமிழீழவிடுதலைப்போராட்டத்தைப் பொறுத்தவரை போராளிகளின் வீரச்சாவு என்பது நாள்தோறும் நடைபெறுகின்ற நிகழ்வாக ஆகிவிட்டது. ஆயினும் இந்திய வல்லாதிக்கத்தின் சூழ்ச்சி, வஞ்சனை, அடாவடிகளினால் எமது போராளிகள் எதிர்கொண்ட வீரச்சாவுகள் தமிழீழ மக்களுக்கு துயரத்தை மட்டுமல்ல என்றும் அகலாத வெறுப்பையும் அடங்காத கடும்சினத்தையும் ஏற்படுத்துபனவாகவும் அமைந்து விட்டன."

"இந்திய வல்லாதிக்க அரசின் சூழ்ச்சி வஞ்சனை வலைகளில் சிக்கி எமது வீரத் தளபதிகள் லெப். கேணல் திலீபன், லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா லெப். கேணல் ஜொனி என பல வீரர்கள் வீரச்சாவை அணைத்துக்கொண்டுள்ளனர். அதனை அடுத்து தற்போது கேணல் கிட்டுவும் மேலும் ஒன்பது வீரர்களும் இந்திய அரசின் அடாவடித்தனத்தினால் கப்பலைத் தகர்த்து தமது இன்னுயிரைத் துறந்து வீரச்சாவைத் தழுவியிருக்கின்றனர்.

"தலைவர் பிரபாகரன் மீது பேரன்பும் பெருமதிப்பும் கொண்ட மூத்த தளபதி கேணல் கிட்டு தன்னை விடுதலைப் புலிகள் இயக்கத்தில்-விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக்கொண்ட நாளில் இருந்து கடந்த பதினைந்து ஆண்டுகளாக தான் மேற்கொண்ட அனைத்துச் செயற்பாடுகளிலும், அவை அரசியல் செயற்பாடுகளாகட்டும் இராணுவச் செயற்பாடுகளாகட்டும் கலை இலக்கிய தொழில்நுட்பத் துறைகளிலாகட்டும் தன் தனித்திறமையை காண்பித்து அவற்றில்தனிமுத்திரை பதித்திருக்கின்றான்.

"அவன் களத்தில் போர்க் கருவிகளுடன் நிற்கும்போதும் சரி எழுதுகோலைக் கையிலேந்தி கட்டுரைகள் தீட்டுவதிலும் சரி, V. D. O. கமராவுடன் நின்றாலும் சரி, புகைப்படமெடுக்க புகைப்படக்கருவியுடன் நின்றாலும் சரி, சொல்லாடல்கள், பேச்சுவார்த்தைகளின் போதும் சரி மக்களின் அன்பையும் ஆதரவையும் பெறுவதிலும் சரி அவன் தன் முயற்சியில் முழுவெற்றியைப் பெற்றிருக்கின்றான்.

"தொடக்கத்தில் பல தளபதிகளின் கீழ் பல களங்களில் தான் சிறந்த வீரன் என்பதை உணர்த்திக் காட்டிய தளபதி கிட்டு 1984 இன் பின் போராட்டத் தளபதியாக இருந்து யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதல், தொலைத்தொடர்பு நிலையத் தாக்குதல், கோட்டை இராணுவ முகாம் முற்றுகை, பலாலி ஆனையிறவு இராணுவ முகாம்கள் மீதானமுற்றுகைகள்என அவன் நடத்திய பல்வேறு வெற்றிகரமான இராணுவ நடவடிக்கைகள் தான் சிங்களப்படைகளை முகாம்களுக்குள் முடங்க வைத்து யாழ். குடா நாட்டு மண்ணை எமது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.

"இயக்கத்தின் கொள்கைகளை போராட்டத்தின் நிகழ்வுகளை மக்களிடையே பரப்புவதற்காக V. D. O. வை ஊடகமாகக் கையாள்வதில் கிட்டு வழங்கிய அறிவுரைகள் எண்ணங்கள் பெரிதும் பயன்பட்டன."

"களத்தில் செய்தி இதழிலும் தமிழகத்தின் வார இதழ்களிலும் அவன் எழுதிய கட்டுரைகள் எமது போராட்டத்தின் நியாயத்தை உலகுக்கு உணர்த்துவதாக, வெளிப்படுத்துவதாக அமைந்தன.

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்ததளபதியும்மத்திய குழு உறுப்பினருமாகிய கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் வீரச்சாவு குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் புலிகளின் குரல் வானொலியில் நேற்றிரவு ஆற்றிய உரையை இங்கு தருகின்றோம்.**

"சிங்கள இராணுவத் தளபதிகளுடனும், சிங்கள அரசியல் தலைவர்களுடனும், பௌத்தமத குருமாருடனும், இந்திய உளவுத்துறையினருடனும் பல்வேறு காலங்களில் அவன் நடாத்திய சொல்லாடல்கள் - பேச்சுவார்த்தைகளின் போது தான் கொண்ட நிலையை உறுதியாக, அழுத்தமாக வற்புறுத்தி அரசியலில் தனக்கிருந்த ஆற்றலை வெளிப்படுத்தினான்.

"கடுமையாக இருக்க வேண்டிய வேளைகளில் கடுமையாகவும், அன்பு பாராட்ட வேண்டிய வேளைகளில் அன்பைப் பொழிவதிலும் மக்களிடம் இருக்கும் ஆற்றலை அறிந்து அவர்களை அவ்வத் துறைகளிலே செயற்பட வைத்து அவர்களின் முழுமையான உழைப்பைப் பெறுவதிலும் தளபதி கிட்டு தன்னிகரற்றவனாக விளங்கினான்.

"அவன் பலரை கண்டித்திருக்கின்றான், தண்டித்திருக்கின்றான் ஆயினும் அனைவராலும் கிட்டண்ணா என்றும் கிட்டு மாமா என்றும் பாசம் பொங்க அழைக்கப்பட்டான். அவன் அனைத்துத் துறைகளிலும் வல்லவனாகத் திகழ்ந்தான். அவன் அறியாத துறை ஒன்றும் இருக்கவில்லை. அவன் அறியாததொன்று இருக்குமாயின் அச்சம்தான் அவன் அறியாதது. படைவலு, ஆள் எண்ணிக்கை, மக்கள் ஒத்துழைப்பு தற்பொழுது இருப்பதை விட குறைவாக இருந்த காலத்திலேதான் தளபதி கிட்டு அருஞ்செயல்கள் பலவற்றைப் புரிந்திருக்கின்றான்.

"அவனது செயல்கள் பெருவெற்றி பெற்றதற்கு அவனிடம் நிறைந்திருந்த அஞ்சாமை உணர்வுதான் பெருங்காரணமாய் அமைந்தது.

"1989 ஆம் ஆண்டின் பின் வெளிநாடுகளில் இருந்து இயங்கிக் கொண்டிருந்த வேளையில் அவன் எழுதிய மடல்கள் ஒவ்வொன்றும் அவன் தன் மண்ணை இயக்கத்தை எவ்வாறு நேசித்தான் தன் தலைவனை எவ்வாறு மதித்துப் போற்றினான், போராளிகளின் நலன்களில் எத்தகைய அக்கறை கொண்டிருந்தான், தமிழீழ மக்களின் குறைகளை இடர்களைக் களைவதில் எத்தகைய ஆர்வத்தினை அவாவினைக் கொண்டிருந்தான் என்பதற்கு எடுத்துக் காட்டுகளாக அமைந்திருக்கின்றன. அவன் எழுதிய அண்மைக்கால மடல்களை தொகுத்து வெளியிட்டால் அது விடுதலை இயக்கத்துக்கு, போராட்ட வீரர்களுக்கு அருங்களஞ்சியமாக அமையும்.

"விடுதலைப் போராட்டத்துக்கு வேண்டிய அனைத்து ஆற்றல்களையும், திறமைகளையும், தகுதிகளையும் பெற்றிருந்த மூத்த தளபதி கேணல் கிட்டுவினதும் அவனுக்கு அருந்துணையாக நீண்ட காலம் பணியாற்றிய லெப். கேணல் குட்டிசிறியினதும் மற்றும் எட்டுப் போராளிகளினதும் இழப்பு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும்விடுதலைப் போராட்டத்துக்கும் பேரிழப்பாகும். எதிரிகளிடம் அடிபணியாது விடுதலைப் புலிகளின் மரபுக்கேற்ப தம்மைத் தாமே மாய்த்த இந்த மாவீரர்களை தமிழீழம் என்றும் நினைவுகூரும் அந்த மாவீரர்களுக்கு நானும்என்வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்."

# தளபதியின் இழப்பு ட்கட்டு
# தமிழீழமெங்கும் சோகமயம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னாள் தளபதியும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகருமான கிட்டுவும் அவருடன் ஒன்பது வேங்கைளும் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட செய்தியால் தமிழீழம்முழுவதும் சோகமயமாகக் காட்சியளிக்கிறது.

வடபகுதியின் பெருவீதிகள் மட்டுமன்றி ஒழுங்கைகள் மற்றும் குச்சொழுங்கைகள் எங்கும் வாழை மரங்கள் கட்டப்பட்டிருப்பதோடு தோரணங்களும் தொங்கவிடப்பட்டுள்ளது. ஒவ்வொருவர் முகத்திலும் சோகத்தின் சுவடுகள் அப்பிப் போயுள்ளது. தமது சொந்த சகோதரனை உற்ற ஓர் உறவினரை இழந்துவிட்டது போன்ற சோகம் எங்கும் பரவியுள்ளது. கறுப்புக் கொடிகளும் எல்லா இடங்களிலும் பறக்க விடப்பட்டிருக்கின்றன. முக்கிய வீதிகளிலும் சந்திகளிலும் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டன.

இத் துயரச் செய்தி கேட்டதும் தனியார் ரியூட்டறிகள் உடனடியாக மூடப்பட்டதுடன், சந்தைகள் மற்றும் கடைத்தெருக்கள் போன்ற இடங்களிலும் சனநடமாட்டம் குறைவடைந்தது.

எங்கும் தளபதியினதும், வேங்கைகளினதும் வீரச்சாவு குறித்த செய்திகளே பேசப்பட்டதுடன் ஒவ்வொருவரும் சோகம் ததும்பும் நெஞ்சத்தினராய் காணப்பட குடா நாடு முழுவதும் சோககீதம் எதிரொலித்தது.

வீடுகள் நிறுவனங்கள் தோறும் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் தளபதி கிட்டுவின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மாலைகள் சூட்டப்பட்டுள்ளன. இரு மருங்கிலும் தீபங்கள் ஏற்றப்பட்டுள்ளன. ஒலி பெருக்கிகள் பொருத்தப்பட்ட வாகனங்களில் வேங்கைகளின் தியாகங்கள் பற்றிய கவிதைகளும் தளபதி கிட்டு பற்றிய கவிதைகளும் உரைச்சித்திரங்களும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

இத் துயரச் செய்தியைத் தாங்கிவந்த பத்திரிகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவியது.

மல் நடந்ததொன்றோ எதுவுமில்லை. இந்தியா திட்டமிட்டு, தளபதி கிட்டுவையும், ஏனைய போராளிகளையும் சாகடித்துள்ளது.

அதேவேளை, இவ்விவகாரத்தில் இந்தியாவின் கூற்றுக்கள் யாவும் உண்மைத் தன்மை அற்றவை; முரண்பாடானவை; நயவஞ்சகத்தனமானவை. விடுதலைப் புலிகளின் கப்பலை இந்தியா 13ஆம் திகதி புதன்கிழமை இரவு 10.00 மணியளவில் கைப்பற்றியது. இதுகுறித்து இந்திய செய்தியாளர்களே உலக செய்தி ஸ்தாபனங்களுக்கு செய்திகளை வழங்கியுள்ளனர். இந்திய பாதுகாப்பு அமைச்சு இவ் விவகாரம் தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தனர். ஆனால், இந்திய பாதுகாப்பு வட்டாரங்களோ, படகு சனிக்கிழமை காலை பிடிபட்டது எனத் தெரிவித்துள்ளமை முழுப்பூசணிக்காயை சோற்றில் புதைக்கும் முயற்சியாகும். இது போன்றதே சர்வதேச கடற்பரப்பில், கைப்பற்றிய கப்பலை இந்தியக் கடற்பரப்பில் வைத்துப் பிடித்ததாகக் கூறுவதுமாகும்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் ஒருபோதும் வற்புறுத்தல் எதற்கும் பணிந்து விடுபவர்களோ அன்றி, பயத்தின் காரணமாக சரணடைந்துவிடக் கூடியவர்களோ அல்ல. எவ்வேளையிலும், எந்த நெருக்கடியின் மத்தியிலும் தமது இயக்க தீர்மானத்திற்கு அமையவே நடந்து கொள்வார்கள் என்பதும் இந்தியாவிற்கு நன்கு தெரியும். இதனை தியாகி திலீபன் விவகாரமும், லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரண்டு போராளிகளின் முடிவுமே இந்தியாவிற்கு உணர்த்தப் போதுமானவையாகும்.

ஆகையினால், புலிகளின் கப்பல்களில் இருப்பவர்கள் மீது நிர்ப்பந்தம் செலுத்தினால், அதன்முடிவு என்னவாக இருக்கும் என்பதும் இந்தியாவிற்குத் தெரியும். இந்நிலையில், இந்தியா கப்பலில் வந்தவர்கள் மீது நிர்ப்பந்தங்களைத் திணித்தமை வேண்டுமென்றே அவர்களைச் சாகடிப்பதற்கெனச் செய்யப்பட்ட சதிவேலையே ஆகும். இதில் சந்தேகம் கொள்ள ஏதுமில்லை.

இந்தியாவின் இக்கேவலமான, கோழைத்தனமான அணுகுமுறையானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரானதென்பதைவிட தமிழீழத் தேசியப் போராட்டத்திற்கு எதிரானதே ஆகும். இந்தியா தொடர்ச்சியாக தமிழீழப் போராட்டத்திற்கு எதிராக மேற்கொண்டுவரும் இராணுவ, இராஜதந்திர அழுத்தத்தின் ஒருபகுதியே ஆகும்.

ஆனால், இதுதனியாக தமிழீழ மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிராக இந்தியா நடத்திய அத்துமீறல் அல்ல. சர்வதேச சட்டதிட்டங்களுக்கு எதிராகவும், விதிகளுக்கு எதிராகவும் நடத்திய ஒரு அத்துமீறலாகும். ஆகையினால், இதனை தமிழ் மக்களுக்காகவோ அன்றி புலிகளுக்காகவோ அல்ல. உலகில் சட்டம் ஒழுங்கு பற்றியும், தனிமனித உரிமைகள் பற்றியும் பேசிக் கொள்ளும் உலக நாடுகள் தமது நிலைப்பாட்டை வற்புறுத்த வேனும் இந்தியாவின் இச்செயலைக் கண்டிக்க வேண்டும். இன்றேல் இவை குறித்துப் பேசுவதை அவை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

# தளபதியின் இழப்பு கேட்டு தமிழீழமெங்கும் சோகமயம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னாள் தளபதியும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகருமான கிட்டுவும் அவருடன் ஒன்பது வேங்கைளும் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட செய்தியால் தமிழீழம்முழுவதும் சோகமயமாகக் காட்சியளிக்கிறது.

வடபகுதியின் பெருவீதிகள் மட்டுமன்றி ஒழுங்கைகள் மற்றுங் குச்சொழுங்கைகள் எங்கும் வாழை மரங்கள் கட்டப்பட்டி ருப்பதோடு தோரணங்களும் தொங்கவிடப்பட்டுள்ளது. ஒவ்வொருவர் முகத்திலும் சோகத்தின் சுவடுகள் அப்பிப் போயுள்ளது. தமது சொந்த சகோதரனை உற்ற ஓர் உறவினரை இழந்துவிட்டது போன்ற சோகம் எங்கும் பரவியுள்ளது. கறுப்புக் கொடிகளும் எல்லா இடங்களிலும் பறக்க விடப்பட்டிருக்கின்றன. முக்கிய வீதிகளிலும் சந்திகளிலும் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டன.

இத் துயரச் செய்தி கேட்டதும் தனியார் ரியூட்டறிகள் உடனடியாக மூடப்பட்டதுடன், சந்தைகள் மற்றும் கடைத்தெருக்கள் போன்ற இடங்களிலும் சனநடமாட்டம் குறைவடைந்தது.

எங்கும் தளபதியினதும், வேங்கைகளினதும் வீரச்சாவு குறித்த செய்திகளே பேசப்பட்டதுடன் ஒவ்வொருவரும் சோகம் ததும்பும் நெஞ்சத்தினராய் காணப்பட குடாநாடு முழுவதும் சோககீதம் எதிரொலித்தது.

வீடுகள் நிறுவனங்கள் தோறும் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் தளபதி கிட்டுவின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மாலைகள் சூட்டப்பட்டுள்ளன. இரு மருங்கிலும் தீபங்கள் ஏற்றப்பட்டுள்ளன. ஒலி பெருக்கிகள் பொருத்தப்பட்ட வாகனங்களில் வேங்கைகளின் தியாகங்கள் பற்றிய கவிதைகளும் தளபதி கிட்டு பற்றிய கவிதைகளும் உரைச் சித்திரங்களும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

இத் துயரச் செய்தியைத் தாங்கிவந்த பத்திரிகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவியது.

## தமிழீழத்திற்காகவே எங்களை நாம் அர்ப்பணிக்கின்றோம்

- தளபதி கிட்டு

"நாங்கள் போராளிகள் மத்தியில் உயர்வு தாழ்வு காட்டக்கூடாதென்ற உயர்ந்த இலட்சியத்தின் அடிப்படையிலேயே சகல வழிகளிலும் இயங்கிவருகின்றோம். அதன் அடிப்படையில்தான் போராட்ட உத்திகளையும் கையாண்டு வருகின்றோம். இதனால்தான் நாம் சிலவேளைகளில் பெருந்தலைவர்களையே இழக்கவேண்டிநேரிடுகிறது. எனினும் எமது போராட்டம் வெற்றிப்பாதையில் சென்று கொண்டிருப்பதற்கும், இப் போராட்ட முறைதான் காரணம் என நாம் எண்ணுகிறோம். 384 போராளிகளை இன்றுவரை நாம் இழந்துள்ளபோதும் அவர்களில் ஒருவரைக்கூட அநியாயமாகப் பறிகொடுத்துவிட்டதாக நாம் கவலைகொள்ளவில்லை. நாங்கள் சிறந்த போராளிகளே தவிர சிறந்த பேச்சாளர்களோ வாய்வீச்சு வீரர்களோ அல்ல. தமிழீழம் என்ற இலட்சியமே எமது முடிவான முடிவு. இதற்காகவே எம்மையே நாம் அர்ப்பணித்துள்ளோம்"

[மேஜர் அல்பேட் ரூபனின் சிலை திறப்புவிழாவில் தளபதி கிட்டு. டிசம்பர், 1986]

## ஆசிக்குளத் தாக்குதல் விடுதலைப்புலிகள் ஊர்ஜிதம்

### 7 பொலிஸார் பலி; ஆயுதங்களும் மீட்பு

வவுனியா ஆசிக்குளம் பகுதியில் கடந்தபுதன்கிழமை இரவு 8.00 மணியளவில் பொலிஸ் காவல் நிலையம் மீது நடாத்திய திடீர் அதிரடித் தாக்குதலில் ஏழு பொலிசார் கொல்லப்பட்டதை விடுதலைப் புலிகள் ஊர்ஜிதப் செய்துள்ளனர்.

இத்தாக்குதலின்போது புலிகளால் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

★ ரி 56 - 1 ரகதுப்பாக்கி - 02

★ ரி 56 மகசின் - 02

★ வாக்கி - 01

★ நடுத்தரரவைகள் - 01

### துக்கதினம்

காத வகையில் துக்கதினத்தை அனுஷ்டிக்குமாறு வர்த்தக சங்கங்கள், மற்றும் பொது ஸ்தாபனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

### பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம் றோட்டரக்ட் கழகத்தினால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் அவர்களின் ஞாபகார்த்தக் கிண்ணத்திற்கான பொது அறிவுப் போட்டியானது தீவகம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி. யாழ் நகரம் எனும் ரீதியில் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

சமாதானத்

கொன்றாய். இன்று கிட்டு உட்பட பத்து வேங்கைகளைக் கொன்றாய்''

"இரத்தவெறி பிடித்த நரசிம்மராவ் ஒழிக''

''சர்வாதிகார முதல்வர் ஜெயலலிதா ஒழிக''

''வேங்கைகள் உயிரென்ன அறுவடைப் பயிரா''

''சர்வதேசமே திரும்பிப் பார்''

''சர்வதேசசெஞ்சிலுவையே! உலகிற்கு அறிவி''

## புயல்பருத்த மாதிரி விழி மூடினாய்

தளராத துணிவோடு களமாடினாய் - இன்று
தமிழீழ நினைவோடு படகேறினாய்
அழகான திருமேனி தணலானதோ? - இந்தி
அதிகாரம் உனக்கிங்கு எமனானதோ?

நீ நடந்த பாதையெங்கும் பூ மலர்ந்தது - தமிழ்
ஈழமெங்கும் உந்தனது பேர்கலந்தது.
தாயகத்துப் போர்க்களத்தில் நீ முழங்கினாய் - தம்பி
தானையிலே தளபதியாய் நீ விளங்கினாய்.

அமைதி தேடி வந்த புறா சிறகிழந்தது - கொடும்
அரக்கர்களின் அம்பு பட்டுத் துடி துடித்தது.
இமய நாடு உந்தனுக்குக் குழி பறித்தது - உன்னை
இழந்ததினால் எங்கள் நெஞ்சு பதை பதைக்குது

சிங்களத்துப் படைகளோடு போராடினாய் - வந்த
இந்தியர்க ளோடும் அன்று வாதாடினாய்
பொங்குகின்ற புலிகளுக்கு வழிகாட்டினாய் - இன்று
புயல்படுத்த மாதிரியாய் விழி மூடினாய்.

பாசத்தோடு ஈழமக்கள் நெஞ்சையாளுவாய் - பிர
பாகரனின் தம்பியாகி என்றும் வாழுவாய்.
ஆசையோடு தேசம் காண வந்த வீரனே! - கிட்டு
அண்ணனென்ற பேரெடுத்த எங்கள் தேவனே!

- புதுவை இரத்தினதுரை

## சாவிற்கு நாம் தயார்; ஆன்மபலமெம்மிடமுண்டு

- தளபதி கிட்டு

''அவர்களிடம் அதிக ஆட்கள், சிறந்த உபகரணம், ஆயுதங்கள், அப்படி இப்படி என்றெல்லாம் உண்டுதான். ஆனால் எம்மிடம் ஆன்மபலமும் வீரமும் உள்ளன. சாவுக்கு நாம் தயார். அவர்கள் சாக ஆயத்தமானவர்கள் அல்லர் வெளியே அவர்கள் புறப்பட்டு வருவதில்லை. ஏன்? எம்மில் கடைசி மனிதன் உயிருடன் இருக்கும் வரை நாம் போர் புரிவோம். அவர்களுக்கு பாரிய இழப்புகள் நேரிடும் அவர்கள் அதனை நன்கு அறிவார்கள்''

(நவம்பர் 86 புரண்டலைன் பேட்டி)

# கடலில் காவியமான தளபதி கேணல் கிட்டு; கப்பலைத் தகர்த்து வேங்கைகள் வீரச்சாவு

## இந்தியாவின் சதி வலையில் சிக்கிய 10 விடுதலைப்புலிகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதியும், மத்தியகுழு உறுப்பினருமாகிய கேணல் கிட்டு நேற்று முன்தினம்காலை வீரச்சாவை அணைத்துக்கொண்டார். அவருடன் லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி உட்பட மேலும் ஒன்பது புலி வீரர்கள் வீரச்சாவு எய்தினர்.

கடந்த புதன்கிழமை இரவு 10 மணியளவில் சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடற்படையால் தடுக்கப்பட்ட புலிகளின் கப்பல் சென்னைக்கு சமீபமாக 12 மைல் தூரம்வரை பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டது. அங்கு புலி வீரர்களை சரணடையுமாறு இந்திய கடற்படையினர் ஆயுத முனையில் நிர்ப்பந்தித்தனர். இந்தியாவிடம் சரணடைய மறுத்த தளபதி கிட்டுவும் ஏனைய போராளிகளும் கப்பலைத் தகர்த்து தற்கொலை செய்துகொண்டனர். இவ்வாறு கேணல் கிட்டு உட்பட பத்துப் போராளிகள் வீரச்சாவு அடைந்தமை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்த அதிகாரபூர்வமான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்வம் பற்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அதிகாரபூர்வமான அறிக்கை வருமாறு :

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதியும் மத்திய குழு உறுப்பினருமாகிய கேணல் கிட்டு நேற்று முன்தினம் காலை வீரச்சாவை அணைத்துக்கொண்டார். அவருடன் லெப்டினன்ட் கேணல் குட்டி சிறி உட்பட மேலும் ஒன்பது புலிவீரர்கள் வீரச்சாவு எய்தினர் இந்திய கடற்படையிடம் சரணடைய மறுத்த கேணல் கிட்டுவும் ஏனைய போராளிகளும் தம்மைத் தாமே அழித்துக் கொண்டனர்.

இந்திய கடல் எல்லையில் இருந்து 450 மைல்களுக்கு அப்பால், சர்வதேச கடற்பரப்பில் கேணல் கிட்டுவும் மற்றைய போராளிகளும் தமிழீழம் நோக்கி வந்துகொண்டிருந்த கப்பலை இந்திய கடற்படை 13 ஆம் திகதி புதன்கிழமை 10.00 மணிக்கு வழிமறித்தது. சர்வதேசக்கடலில் இடை மறிப்பது சட்டவிரோதமானது என கேணல் கிட்டு ஆட்சேபம் தெரிவித்தார்.

இந்த ஆட்சேபத்தை பொருட்படுத்தாது இந்திய கடற்படையினர் புலிகளின் கப்பலை பலவந்தமாக இந்தியா நோக்கிக் கொண்டு சென்றனர். இதனையடுத்து புலிகளின் சர்வதேச தலைமையகம் இந்திய அரசின் இந்தச்சட்ட விரோதமான அத்துமீறல் செயலை கண்டித்ததுடன் இவ்விவகாரத்தை சர்வதேச செய்திநிறுவனங்கள் மூலம் உலகிற்கு பகிரங்கப்படுத்தியது ஆனால் இச்சம்பவம் தொடர்பாக இந்திய அரசு எதுவும் கூறாமல் மௌனம் சாதித்தது.

இரண்டு நாள் கடல் பயணத்தை அடுத்து 16-ம் திகதி சனிக்கிழமை காலை, இந்திய கடல் எல்லைக்குள் புலிகளின் கப்பல் கொண்டுவரப்பட்டது. சென்னைத் துறைமுகத்திலிருந்து 12 மைல் தொலைவில் வைத்து புலிகளின் கப்பல் நிறுத்தப்பட்டது அதன் பின் கேணல் கிட்டுவையும் ஏனைய போராளிகளையும் சரணடையுமாறு இந்திய கடற்படை நிர்ப்பந்தித்தது. இதனைத் தொடர்ந்து கப்பலை சுற்றி வளைத்து. இந்திய கடற்படையினர் புலிகளை கைதுசெய்யும் நடவடிக்கையில் இறங்க முற்பட்டனர். அப்பொழுது இந்திய கடற்படையினரிடம் சரணடைய விரும்பாத கேணல் கிட்டுவும் ஏனைய புலி வீரர்களும் கப்பல் ஊழியர்களை வெளியேற்றிவிட்டு கப்பலைத் தகர்த்துதம்மைத்தாமே அழித்து வீரச்சாவை தழுவிக் கொண்டனர்.

ஐரோப்பிய சமூகநாடுகளின் மத்தியத்துவத்துடன் தமிழரின் தேசிய பிரச்சினைக்கு சமாதான வழி மூலம் தீர்வு காணும் ஒரு சமரசத் திட்டத்துடன் கேணல் கிட்டு தமிழீழம் நோக்கி வந்து கொண்டிருந்தார். இந்த சமாதானத் திட்டம் பற்றி தலைவர் பிரபாகரனுடன் கலந்தாலோசிக்கும் நோக்குடனே அவர் தனது பயணத்தைமேற்கொண்டார். இந்த சமரசத் திட்டம் பற்றியும். அதில் ஐரோப்பிய நாடுகளின் பங்கு பற்றியும் எமது சர்வதேச தலைமையக பேச்சாளர் பல்வேறு வழிகளில் இந்திய அரசுக்கு தெரிவித்திருந்த போதும் இந்தியா அதற்கு செவிசாய்க்கவில்லை. தமிழர் பிரச்சினைக்கு சமாதான வழிமூலம் தீர்வுகாணும் இந்த சர்வதேச முயற்சிக்கு முட்டுக் கட்டையாக இருக்க வேண்டாமென தமிழ் நாட்டு தலைவர்கள் விடுத்த வேண்டுகோளையும் இந்திய அரசு நிராகரித்தது. சர்வதேசக் கடலில் தமது கப்பலை வழிமறிப்பது சட்ட விரோதமானது என்றும், தம்மை கைது செய்ய முற்பட்டால் தம்மைத் தாமே அழித்துக் கொள்ளப் போவதாகவும் கேணல் கிட்டு பல தடவைகள் எச்சரிக்கை விடுத்ததையும் இந்திய அரசு பொருட்படுத்தவில்லை.

சர்வதேச கடற் பரப்பில் வைத்து புலிகளின் கப்பல் வழி மறிக்கப்பட்டதும், சர்வதேச சமாதான முயற்சிக்கான பயணம் என்பதை அறிந்திருந்தும் இந்திய அரசு மேற்கொண்ட இந்த அநீதியான நடவடிக்கை ஒரு உண்மையை தெளிவுபடுத்துகிறது. அதாவது புலிகளின் தளபதிகளை அழித்து தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதே இந்தியாவின் நாசகாரத் திட்டமாகும். இந்த நாசகார சதிவேலைக்கு எமது மூத்த தளபதி கிட்டுவும் ஏனைய போராளிகளும் பலியாகியுள்ளனர். இந்த அநீதியான செயலை அமைதியும் சமாதானமும் விரும்பும் சர்வதேச உலகம் கண்டிக்க வேண்டும்.

இந்த சம்பவத்தில் வீரச்சாவை தழுவிய கேணல் கிட்டு, லெப் கேணல் குட்டி சிறீ, மேஜர் வேலன், கப்டன் குணசீலன், கப்டன் ஜீவா, கப்டன் ரொசான், கப்டன் நாயகன், லெப். அமுதன், லெப். நல்லவன், லெப். தூயவன் ஆகியோருக்கு விடுதலைப்புலிகள் இயக்கம் தனது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறது.

# வங்கக் கடலில் காவியமான வேங்கைகள்






# வங்கக் கடலில் காவியமான வேங்கைகள்



மேஜர்
**வேலன் (மலரவன்)**



கடற்புலி கப்டன்
**ஜீவா**



கடற்புலி கப்டன்
**றொசான்**



கடற்புலி கப்டன்
**குணசீலன் (குணராஜ்)**



கடற்புலி கப்டன்
**நாயகன்**



கடற்புலி லெப்டினனட்
**அமுதன்**



கடற்புலி லெப்டினன்ட்
**நல்லவன்**



கடற்புலி லெப்டினன்ட்
**தூயவன்**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.